# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்

முன்னிலை : திரு.எஸ்.சந்திரசேகரன், பி.ஏ., பி,எல்.,

**(JO. Code : TN01442)**

முதன்மை சார்பு நீதிபதி, திருப்பூர்

கூடுதல் சார்பு நீதிபதி, (முழு பொறுப்பு)

2022−ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம், சித்திரை மாதம் 8 ம் நாள்

**அசல் வழக்கு எண். 468/2018**

**TNTI**04002446-2018

1. திரு.கே.கருப்புசாமி, த.பெ. குமரன் வயது 60, க.எண். 4/706, ஏ.பி. நகர் கிழக்கு, வீரபாண்டி அஞ்சல், திருப்பூர் தாலூக்கா, திருப்பூர் மாவட்டம்.
2. திரு.கே.ரமேஷ், த.பெ. கருப்புசாமி, வயது 43, க.எண். 4/706, ஏ.பி. நகர் கிழக்கு, வீரபாண்டி அஞ்சல், திருப்பூர் தாலூக்கா, திருப்பூர் மாவட்டம்.
3. திரு.எஸ்.சித்ரா, க.பெ. சபரீஸ்வரன், வயது 35, க.எண். 1/517, செந்தூர் கார்டன், 6 வது வீதி, கள்ளாங்காடு, திருப்பூர்.

..வாதிகள்

..எதிர்..

1. திரு.என்.அருணாசலம், த.பெ. நடராஜன், க.எண். 2/53, நடராஜ் காம்பவுண்ட், மாகாளியம்மன் கோவில் வீதி, வீரபாண்டி, திருப்பூர்.
2. திரு.என்.சந்திரசேகர், த.பெ. நடராஜன், க.எண். 2/390, வீரபாண்டி மெயின் ரோடு, வீரபாண்டி, திருப்பூர்.
3. திருமதி.ஆர்.செல்வி க.பெ. ராஜகோபால், க.எண். 2/53 ஏ, நடராஜ் காம்பவுண்ட், மாகாளியம்மன் கோவில் வீதி, வீரபாண்டி, திருப்பூர்.
4. திருமதி.பி.சிவகாமி க.பெ. பாலசுப்ரமணியம், க.எண். 440, ஜி. பி. காம்ப்ளக்ஸ், என்.எஸ்.ஆர் ரோடு, சாய் பாபா காலனி, சிவசக்தி பஸ் ஸ்டாப்,கோயம்புத்தூர் 641030.(Amended as per order in I.A.No.475/2018)

..பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, தாவா சொத்துக்களை நலந்திகடு கலந்து 5 சம பாகங்களாக பிரிவினை செய்து, அதில் ஒரு சம பாகத்தை அதாவது 3/15 பாகத்தை நலந்திகடு கலந்து வாதிகளுக்கு ஒதுக்கி முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கவும், தாவா செலவுத்தொகை கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 30.10.2018

| | |
|---|---|
| வழக்கு மூலம் | :கடந்த 01.07.1974, 19.08.1981, 12.04.2013 பின்னிட்ட தேதிகளில் திருப்பூர் டவுன் திருப்பூர் தாலூக்காவில் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது. |
| தாவா மதிப்பு | :தாவா மொத்த மதிப்பு ரூ.5,82,470/– தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு 37(2)–ன் படி ரூ. 5,000/– நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு என் முன்பாக கடந்த 08.03.2022–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்ததில் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பொன்ராம், M.A.B.L.,, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் ஆஜராகவில்லை, வாதிகள் தரப்பில் எடுத்துரைத்த வாதங்களை கேட்டறிந்தும், வழக்குரை, மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## தீர்ப்பாணை

1. வாதிகள், தாவா சொத்துக்களை 5 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் ஒரு சம பாகமாக 3/15 பாகத்தை அதன் தனி சுவாதீனத்தோடு பெறத்தக்கவர்கள் என்று விளம்பியும், வழக்கின் தன்மை, சூழ்நிலை

மற்றும் தரப்பினர்களுக்கிடையேயான உறவுமுறையை கருத்திற்கொண்டு அவரவர்கள் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்கவேண்டுமென்று உத்தரவிட்டும் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

<u>**தாவா செலவுத்தொகைப்பட்டியல்**</u>

<u>**வாதிகள் தரப்பில்**</u> <u>**பிரதிவாதிகள் தரப்பில்**</u>

(இல்லை)

**சொத்து விபரம்**

**Item 1**

திருப்பூர் ரிடி, திருப்பூர் ஜாயிண்ட் II சப்டி பல்லடம் தாலுக்கா வீரபாண்டி கிராமம் க.ச. 610/2 நெ.பு.ஏ 4.30 க்கு தரம் ரூ. 3.50 ல் தென்புரமாக உள்ள ஏ 2.15 உள்ள பூமியில் கிழமேல் ரோட்டுக்கும் வடக்கு ஷ காலையில் எங்களுக்கு இன்னும் பாத்தியப்பட்டுள்ள காலியிடத்துக்கும் தெற்கும் மேற்கு ராசநாவிதன் வீட்டுக்கும் கிழக்கு இதன் மத்தியில் முத்துசாமி கவுண்டர் அவிநாசியப்பன் இருபுரமும் தென்வடலடி 75 வடபுரம் கிழமேல் அடி 44 தென்புரம் கிழமேல் அடி 23 இந்தளவுள்ள 2512 ½ சதுரடி விஸ்தீரணமுள்ள வீடு கட்டும் காலியிடம் பூராவும் சகிதம். ஷ இடத்தில் கட்டப்பட்டுள்ள 2 ஓட்டுவில்லை வீடுகளும் மற்றும் கடையும் ஷ வீடு மற்றும் கடைக்கு உண்டான மின் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் தட பாத்தியம் சகிதம்.

**Item 2**

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஜாயிண்ட் 2 சப்டி, பல்லடம் தாலுக்கா, வீரபாண்டி கிராமம் க.ச. 375/2 நெ. பு.ஏ 4.39 க்கு தரம் 3.56 இதில் பழனிசாமி பூமிக்கும் தெற்கு முத்துசாமி பூமிக்கும் வடக்கு ராமசந்திரன் பூமிக்கு கிழக்கு ராசப்பன் பூமிக்கும் ஆறுமுகம் பழனிசாமி நடராஜன் முத்துசாமி மாரப்பன் இவர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட 10 அடி அகல தடத்துக்கும் மேற்கு இதன் மத்தியில் 10 செண்ட் இடத்தில் விற்பனை செய்த இடம் 1.5 செண்ட் போக மிதம் உள்ள 8.5 செண்ட் இடம்.

| | |
|---|---|
| க.ச. 375/2 நெ. பழனிசாமி பூமிக்கு | .... தெற்கு |
| முத்துசாமி பூமிக்கு | ... வடக்கு |
| ராமசந்திரன் பூமிக்கு | ... கிழக்கு |
| ராசப்பன் பூமிக்கும் ஆறுமுகம், பழனிசாமி, நடராஜன் மாரப்பன் இவர்களுக்கு பாத்தியப்பட்ட 10 அடி அகல தடத்திற்கும் | ... மேற்கு |

ஷ இடத்தில் கட்டப்பட்டுள்ள 7 வீடுகளுக்கு உண்டான மின் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் தட பாத்தியம் சகிதம்.

2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21–ம் நாள் எனது கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒம்/– எஸ்.சந்திரசேகரன்.,
கூடுதல் சார்பு நீதிபதி (FAC),
திருப்பூர்.